**நிகவெரட்டிய பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 18 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர 07 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிகவெரட்டிய பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் கூடுதலாக அறவிடப்பட்டிருந்த ரூபா 27,698 தொகை உள்ளடக்கப்பட்ட 15 செலுத்த வேண்டிய மீதிகள் கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 16 காணித் துண்டுகளுக்காக சட்டரீதியான உறுதிகளைப் பெற்றுக்கொண்டு காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 250,000 நூலகப் புத்தகங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கேள்வி வைப்புக்கள் ரூபா 2,130,613 ஆக இருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலையின் பிரகாரம் கேள்வி வைப்புக்களின் பெறுமதி ரூபா 4,582,760 ஆக இருந்தமையால் ரூபா 2,452,147 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான இறுதியில் கீழ் 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காணப்பட்ட மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய பதிவேடுகளில் காணப்பட்ட மீதிகளுக்கு இடையே ரூபா 4,819,873 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

#### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 48,991,062 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 1,868,418 தொகை 3

ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்ட மீதிகளாக இருந்தன.

(ii) நிர்மாண கடன்பட்டோரினுள் முறையே 2011, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 92,427 தொகையும் ரூபா 47,303 தொகையும் ரூபா 8,213,907 தொகையுமாக ரூபா 8,353,637 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 38,887,432 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 9,132,733 இற்குரிய காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ரூபா 2,018,917 தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மீதிகளாக இருந்தன.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் நானாவித வைப்புக்களின் கீழ் ரூபா 1,321,710 ஆன 13 மீதிகள் காணப்பட்டதுடன் அதில் 2012 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 179,154 கூட்டுத்தொகையான 03 மீதிகளும், 2013 ஆம் ஆண்டிற்குரிய மொத்தம் ரூபா 4,838 ஆன 04 மீதிகளும், 2014 ஆம் ஆண்டிற்குரித்தாக ரூபா 288,029 ஆன 03 மீதிகளுமாக ரூபா 472,021 தொகை 01 ஆண்டு முதல் 04 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் தீர்வு செய்யப்படாமல் காணப்பட்டன.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 17,432,981 ஆக இருந்ததுடன் அதில் 2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 3,169,878 தொகையும் 2014 ஆம் ஆண்டிற்குரித்தாக ரூபா 4,723,897 தொகையுமாக மொத்தம் ரூபா 7,893,775 ஆக காணப்பட்டது.

(iv) மீளாய்வாண்டின் இறுதியில் கேள்விதாரருக்கு விடுவிக்கப்படாத கேள்வி வைப்புக்களாக ரூபா 4,582,760 தொகையாக இருந்ததுடன் அதில் 01 ஆண்டு முதல் 11 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் தீர்வு செய்யப்படாமல் காணப்பட்ட ரூபா 1,699,580 தொகையான 166 மீதிகள் காணப்பட்டன.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டின் இறுதியில் நானாவித வைப்புக்களின் கீழ் ரூபா 6,078,815 ஆன மீதியை உறுதிப்படுத்துவதற்காக வைப்புப் பதிவேடோ அல்லது பட்டோலையொன்றோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396 | வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 143,670 பெறுமதியான 08 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 2006 இன் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.14.1 ஆம் பிரிவு | நேரடியாகப் பெற்றுக்கொண்ட 03 விலை விபரங்களின் பேரில் ரூபா 250,000 இற்கு மேற்படாத பொருட்களை பெற்றுக்கொள்ள முடியுமான போதிலும், சபையினால் |

3 நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் விலை விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு ரூபா 1,140,000 பெறுமதியான பொருட்களும் விலை கோராமல் ரூபா 1,210,944 பெறுமதியான பொருட்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

| | | |
|---|---|---|
| (இ) | 2006 இன் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 8.9.3 ஆம் பிரிவு | ரூபா 500,000 இனை விஞ்சும் பொருட்கள் சேவைகள் வழங்கி கொள்வனவு செய்யும் போது ஒப்பந்த உடன்படிக்கையொன்று மேற்கொள்ள்ப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,437,308 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,601,130 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 5,836,178 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த செயற்பாட்டு விளைவிற்கு ரூபா 5,982,800 மூலதன பெறுவனவுகள் மற்றும் ரூபா 26,533,359 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 11,113,251 ஆன பற்றாக்குறையாக மாறியிருந்தது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | வருமானம் | | | | செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | 2015 | 2014 | முரண் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 18,981 | 16,605 | 2,376 | தனிப்பட்ட வேதனம் | 44,704 | 30,628 | 14,076 |
| (ii) | ஏனையவை | 60,393 | 40,833 | 19,560 | ஏனையவை | 25,234 | 23,209 | 2,025 |
| | உப மொத்தம் | 79,374 | 57,438 | 21,936 | உப மொத்தம் | 69,938 | 53,837 | 16,101 |
| (iii) | மூலதன வருமானம் | 5,983 | 26,226 | (20,243) | மூலதன செலவினம் | 96,471 | 73,754 | 22,717 |
| | மொத்தம் | 85,357 | 83,664 | 1,693 | மொத்தம் | 160,120 | 117,910 | 42,210 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| செயற்பாட்டு விளைவு | 9,437 | 3,601 | 5,836 | மிகை/ பற்றாக்குறை | (11,114) | 9,910 | (1,204) |

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 79,375,000 தொகையில் 76 சதவீதம் அதாவது ரூபா 60,393,442 தொகை சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினால் அடங்கியுள்ளது. அவ்வாறே மூலதன வருமானமாகிய ரூபா 5,982,800 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களினால் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணமாகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமாகிய ரூபா 69,937,692 தொகையில் மொத்தமாக 64 சதவீதமான ரூபா 44,703,838 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் மொத்தமாக 91 சதவீதம் அதாவது ரூபா 40,607,184 தொகை சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன், அப் பெறுமதி ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவினமாகிய ரூபா 26,533,359 தொகையில் மொத்தமாக 30 என ரூபா 8,058,792 தொகை மாத்திரம் சபை நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 70 சதவீதமான ரூபா 18,474,567 அளவு கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் நிதிஏற்பாடுகளின் பேரில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளாகும்.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன. ஆண்டு

| | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 3,244 | 2,565 | 1,743 | 2,923 | 3,271 | 1,574 |
| (ii) குத்தகை வாடகை | 10,520 | 11,370 | 12,389 | 8,491 | 10,475 | 412 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,162 | 994 | - | 450 | 1,069 | - |
| (iv) ஏனைய வருமானம் | 65,235 | 47,914 | 21,208 | 56,386 | 42,622 | 19,721 |
| மொத்தம் | 80,161 | 62,843 | 35,340 | 68,250 | 57,437 | 21,707 |

**2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | வருமான சேகரிப்பு 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | நிலுவை மீதி பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2015/12/01 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரி மற்றும் வரி | 1,574 | 3,285 | 4,859 | 549 | 2,565 | 3,114 | 1,023 | 720 | 1,743 |
| வாடகை | 13,168 | 11,671 | 24,839 | 1,080 | 11,370 | 12,450 | 12,088 | 301 | 12,389 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | - | 994 | 994 | - | 994 | 994 | - | - | - |
| *ஏனைய வருமானம் | 21,055 | 63,425 | 84,480 | 15,358 | 47,914 | 63,272 | 5,697 | 15,511 | 21,208 |
| மொத்தம் | 35,797 | 79,375 | 115,172 | 16,987 | 62,843 | 79,831 | 18,808 | 16,532 | 35,340 |

**2.3.3 வீதவரியும் வரியும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 1,573,577 தொகையான நிலுவை வீதவரி மற்றும் வரிகள் காணப்பட்டதுடன் அதில் ஆண்டில் 35 சதவீதம் அதாவது ரூபா 550,058 தொகை மாத்திரம் கிடைக்கப் பெற்றிருந்தமையால் ரூபா 1,023,519 தொகை நிலுவையாக இருந்ததுடன், அது தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிவல்லை.

(ஆ) மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 3,284,910 வருமானத்தில் 78 சதவீதம் அதாவது ரூபா 2,565,279 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 719,631 நிலுவையாக காணப்பட்டது.

**2.3.4 பஸ் நிலையத்திலுள்ள கடை வாடகை**

(அ) நிக்கவரட்டிய பஸ் நிலையத்தில் முற்கொடுப்பனவு முறைமையில் வழங்கப்படும் குறைந்த கேள்வியான ரூபா 711,000 தொகையான 05 கடைகள் மீளாய்வாண்டின் போது கேள்வி கோரி வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிக்கவரட்டிய பஸ் நிலையத்தில் முற்கொடுப்பனவு முறைமையில் வழங்கப்படும் கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் குறிப்பிட்ட முற்கொடுப்பனவு 05 மாதங்களுக்குள் செலுத்தி முடிக்க வேண்டிய போதிலும், கேள்வி கோரி 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 03 கடைகள் தொடர்பாக ரூபா 2,083,200

ஆன கேள்வி தொகையில் எத்தகைய தொகையொன்று செலுத்தப்படாதிருந்ததுடன் மேலும் 02 கடைகளுக்குரிய ரூபா 340,300 ஆன பங்குப் பணம் நிலுவையாக காணப்பட்டது.

(இ) பஸ் நிலையத்தின் மேல் மாடியின் கடைகள் முற்கொடுப்பனவு முறைமையில் வழங்கப்படும் நிபந்தனைகளின் பிரகாரம் கேள்வித் தொகையில் 50 சதவீதம் 21 நாட்களிலும் மீதித் தொகையை 90 நாட்களிலும் செலுத்தி முடிக்க வேண்டும். எனினும், கேள்வி வழங்கப்பட்டு 03 வருடங்களுக்க மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 05 கடைகள் தொடர்பாக ரூபா 1,889,250 கூட்டுத்தொகையான ஒரே தடவையில் செலுத்தும் பணம் நிலுவையாக காணப்பட்டன.

(ஈ) பஸ் நிலையத்தின் நில மாடியில் 12 கடைகள் மற்றும் மேல் மாடியின் கடையொன்றின் ரூபா 154,237 ஆன மின்சாரப் பட்டியல் குறித்த கடை குத்தகையாளரால் செலுத்தப்பட வேண்டிய போதிலும், அதற்குரிய பிரிவினை உடன்படிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் பேரில் மின்சாரப் பட்டியல் சபை நிதியத்திலிருந்து செலுத்த நேர்ந்திருந்தது.

**2.3.5 குத்தகை வாடகை**
-----------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் ரூபா 13,168,493 ஆன ஆரம்ப மீதியொன்றாக காணப்பட்ட நிலுவை வாடகை வருமானத்தில் 8 சதவீதம் அதாவது ரூபா 1,080,445 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் 92 சதவீதமான ரூபா 12,088,048 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

(ஆ) நிகவரட்டிய சுகாதார நிலையத்தில் கேள்வி மூலம் குத்தகைக்கு எடுத்த 14 கடைகளிலிருந்து 01 ஆண்டு முதல் 04 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் அறவிடப்படாமல் காணப்படும் கேள்வி குத்தகை தொகையின் பெறுமதி ரூபா 7,109,600 ஆக இருந்தது.

(இ) நிகவரட்டிய சிகிச்சை நிலையத்தின் கடைகளை குத்தகைக்கு வழங்கும் கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித் தொகையில் 50 சதவீதம் உரிய கடிதம் கிடைத்து 30 நாட்களுக்கு உள்ளாகவும் எஞ்சிய தொகை 90 நாட்களுக்கு உள்ளாகவும் ஒரே தடவையிலோ அல்லது பகுதி பகுதியாகவோ செலுத்தப்பட வேண்டிய போதிலும், கேள்வி காலப்பகுதியில் ரூபா 759,900 தொகையான 02 கடைகளுக்காக எவ்வித பணமும் செலுத்தப்படாதிருந்ததுடன் மேலும் 11 கடைகளுக்குரிய கேள்வித் தொகையான ரூபா 8,786,100 இல் ரூபா 5,689,800 நிலுவையாக காணப்பட்டன.

**2.3.6 ஏனைய வருமானம்**
-----------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமான முச்சக்கர வண்டி நிறுத்தும் இடங்களின் மொத்த எண்ணிக்கை கணிப்பீடொன்றின் மூலம் இனங்காணப்படாதிருந்த போதிலும், 04 முச்சக்கர வண்டிகள் நிறுத்துமிடங்களுக்குரிய பதிவு செய்யப்பட்ட 144 முச்சக்கர வண்டிகளுக்காக ஒன்றிலிருந்து ரூபா 400 வீதம் ரூபா 57,600 அறவிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 20,800 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை மீதி ரூபா 36,800 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 21,055,000 ஆன ஏனைய வருமான மீதியில் ரூபா 15,358,000 தொகை மீளாய்வாண்டினுள் அறவிடப்பட்டிருந்ததுடன், அதில் 27 சதவீதமான அதாவது ரூபா 5,696,444 தொகை ஆண்டின் இறுதியில்

நிலுவையாக காணப்பட்டது. நிலுவை தொடர்பாக காலப்பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் தொலைபேசி தொடர்பு கோபுரங்களின் எண்ணிக்கை இனங்காணப்பட்டு பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிறுவப்பட்டிருந்த கோபுரங்கள் தொடர்பான அறிக்கையொன்றை கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் அவ்வறிக்கை கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. தொடர்பாடல் கோபுரங்கள் தொடர்பான தகவல்கள் வருமான பரிசோதகரிடம் காணப்படாமல் இருந்ததுடன் 2016 சனவரி 21 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது தொடர்பாடல் கோபுரங்கள் மாத்திரம் அவதானிக்கப்பட்டதுடன் அதன் உருவாக்கல் கம்பனியின் பெயர் ஸ்தாபிக்கப்பட்ட திகதி போன்ற தகவல்கள் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

(ஈ) இலங்கை குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8-2009 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த தொடர்பாடல் கோபுரங்களுக்குரிய நிறுவல் கட்டணங்கள், இணக்கச் சான்றிதழ்கள் வழங்குதல் தொடர்பான கட்டணங்கள் மற்றும் அனுமதியற்ற நிர்மாணம் தொடர்பாக சபைக்கு அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.7 நீதிமன்றத் தண்டப் பணம்

மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 7,485,792 ஆன நீதிமன்றத் தண்டப் பணம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதில் 59 சதவீதம் அதாவது ரூபா 4,427,917 தொகை ஆண்டினுள் அறவிடப்பட்டிருந்தது. ரூபா 3,057,875 தொகை மேலும் நிலுவையாக காணப்பட்டது.

### 2.3.8 முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 15,118,530 ஆக இருந்ததுடன், அதில் 62 சதவீதம் அதாவது ரூபா 9,422,086 ஆண்டினுள் அறவிடப்படாதிருந்ததுடன் அதில் ரூபா 5,696,444 தொகை 2013 மற்றும் 2014 ஆண்டுகளுக்குரித்தாக மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் முழுமையான பட்டியலிடலான ரூபா 8,356,563 தொகை ஆண்டின் இறுதியில் நிலுவையாக காணப்பட்டது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாண முற்பணங்களாக ரூபா 1,530,605 தொகை தீர்க்கப்படாமல் காணப்பட்டதுடன் அதில் 2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 949,760 ஆன மீதியொன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் மார்ச் மாதம் 10 ஆந் திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலைக் கணக்கின் செலவு மீதி ரூபா 136,225 ஆக இருந்த போதிலும் கணக்கில் காணப்படும் மீதியை விஞ்சும் வகையில் ரூபா 624,165 பெறுமதியான இரண்டு காசோலைகள் வழங்கப்பட்ட காரணத்தினால் ரூபா 487,940 ஆன மேலதிகப்பற்று உருவாகியிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் 04 – 11 ஆண்டுகள் வரையான காலம் முதல் அறவிடப்படாத ரூபா 26,444 ஆன ஊழியர் 05 கடன் மீதிகள் காணப்பட்டன.

(ஈ) மீளாய்வாண்டில் பொருள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வழங்குனர் பதிவு செய்யப்படாதிருந்ததுடன், இதற்காக பத்திரிகை அறிவித்தலும் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(உ) பசுக்கள் வழங்கப்பட்ட நலனாலிகளுக்கும் சபைக்கு இடையே உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும், இந்த உடன்படிக்கையில் குறித்த நலனாலிகளுக்கு வழங்கப்பட்ட பசுக்களை இனங்காண்பதற்காக எவ்வித தகவல்களும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 804,098 செலவிடப்பட்டு மேம்படுத்தப்பட்டிருந்த ரஸ்னாயக்கபுர வாரச்சந்தை 2011 செப்தம்பர் 01 ஆந் திகதி திறந்துவைக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு வரையிலும் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டிருந்தது.

(ஆ) திம்பிரியாகம பிரதேசத்தில் அமைந்துள்ள கழிவுப்பொருள் வெளியேற்றப்படுகின்ற காணியில் கழிவுப்பொருட்களை மூடுவதற்காக m.s – 150 வகையான பெக்கோ இயந்திரம் இயந்திர மணித்தியாலமொன்றுக்கு ரூபா 5,000 வீதம் கொடுப்பனவு செய்வதற்கு மணித்தியால அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவின் போது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மதிப்பீடொன்று மற்றும் நிறைவேற்றப்பட்ட வேலை அறிக்கையொன்றும் இல்லாமலும் 15 மணித்தியாலங்களுக்காக ரூபா 7,500 வீதம் ரூபா 90,000 கொடுப்பனவு செய்தமையால் ரூபா 15,000 நட்டமொன்று சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

---------------------------------

2016 சனவரி 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியங்களின் கீழ் கல்லேவ மிமினிகோன வீதி அபிவிருத்தி நிர்மாண வேலையின் 2 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் இரண்டு பக்கத்திலும் துணைச் சுவர்களுக்காக ரூபா 20,428 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், வளைவு முறையாக அமைக்கப்படாமையால் முன்னோக்கி வெளியே தள்ளி அமிழ்ந்து கீழிறங்கிய நிர்மாணம் அவதானிக்கப்பட்டதுடன் 04 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் (ரூபா 212,590) முன்கலவை கொங்கிரீட் அச்சுக்கல் வழங்கி 50mm தடிப்பில் இருக்கும் வகையில் கற்தூள் பரப்பி அதன் கீழ் 2.5mm/5mm இடைவெளியில் வரும் வகையில் ஒரே சீரான கற்கள் நட்டு இடைவெளிகளில் கற்தூள் நன்றாக விழக்கூடிய வகையில் இட்டு பதப்படுத்தி மட்டப்படுத்தப்பட வேண்டிய போதிலும், ஓட்டைகளில் கற்தூள் இல்லாமையால் இடைவெளி தோன்றியிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் சபை நிதியத்தினைப் பயன்படுத்தி பூர்த்தி செய்யப்பட்ட 21 நிர்மாண வேலைகளில் 12 அல்லது 57 சதவீத வீதிகளுக்கு குருணிக்கற்கள் இடப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 3,104,632 தொகை செலவிடப்பட்டிருந்தது. பௌதீக ரீதியான பரிசோதனையின் போது பிரதேசத்தில் காணப்படும் அநேகமான வீதிகள் இயற்கையாகவே குருணிக்கற்களுடைய வீதிகளாக

அவதானிக்கப்பட்டதுடன், தொழில்நுட்ப உத்தியோகத்தரால் குருணிக்கற்கள் இடப்பட்டதாக கணக்காய்விற்கு காண்பிக்கப்பட்ட வீதிகளில் குருணிக்கற்கள் கழுவிச் செல்லப்பட்டு குழிகள் தோன்றியிருந்தன. அதன் பிரகாரம் வீதிகளுக்கு குருணிக்கற்கள் இடப்பட்டமை பயனற்ற செலவினமொன்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 4.1.1 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்

ஆசிய அபிவிருத்தி கடன் மானியங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 61,099,770 பெறுமதியான நிக்கவரட்டிய சிகிச்சை நிலையம் 2011 திசெம்பர் வரையிலும் வேலை நிறைவுபெற்று 04 ஆண்டுகள் நிறைவுபெற்றிருந்த போதிலும் குறித்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்